# கலைஞரும் நானும்

92

கலைஞர் பிறந்த திருவாரூரில், அவருக்கு 40 ஆண்டுகளுக்குப் பின் பிறந்தவன் என்பதுடன், தாய்ப்பால் குடித்த காலத்திலேயே எனக்கு திராவிடப் பால் புகட்டப்பட்டதால் கலைஞர் மீதான மயக்கம், என் பதின்பருவத்திலேயே உண்டாகிவிட்டது என, தனது நினைவுகளைப் பகிர்கிறார், எழுத்தாளர் தமிழ்நாடன்.



# பிரமிக்க வைக்கும் பிரபஞ்சம் கலைஞர்!

**ஆரூர் தமிழ்நாடன், எழுத்தாளர்**

என் தந்தையார் டாக்டர் ராஜன், கலைஞர் பித்தர். அண்ணா பிறந்த நாள், கலைஞர் பிறந்த நாள் என கட்சிக் கொண்டாட்டங்கள் எதுவானாலும், அன்று எங்கள் 'ராஜன் பல் மருத்துவமனை'யில் நாகூர் ஹனீபா ஸ்பீக்கரில் பாடுவார். தந்தையார் கட்சிப் பொறுப்பிலும் இருந்ததால், கழகக் கூட்டத்துக்கு வரும் பேச்சாளர்களுக்கு, எங்கள் வீட்டில் இருந்து சாப்பாடு போகும். மொத்தத்தில் எங்கள் வீடு கருப்பு சிவப்பு வீடாகக் களை கட்டிய வீடு.

கலைஞரின் இளமைக் கால நண்பர்களான டாக்டர் விஜயராகவன், தென்னன் உள்ளிட்டோர் அன்றாடம் கூடும் 'கருப்பு சிவப்பு வேடந்தாங்கலாக' எங்கள் பல்கட்டும் நிலையம் இருக்கும். அவர்களின் உரையாடல்களில், கலைஞரே பொங்கி நுரைப்பார். அதன் மூலம் கிடைத்த மயக்கமும் அலாதியானது.

1969-ஆம் ஆண்டு, முதல்வரான அண்ணா மறைகிறார். ஊரில் இருந்த வானொலிப் பெட்டிகள் எல்லாம் சோககீதம் இசைத்து அழுதன. **'பூவிதழின் மென்மையிலும் மென்மையான புனித உள்ளம்'** என, கலைஞர் வானொலியில் கவிதைக் கண்ணீர் வடித்து, தமிழகத்தைத் தேம்ப வைக்கிறார். அதன் தாக்கத்தில் பின்னொரு நாள் அண்ணாவுக்காக நானும் கண்ணீர் கவிதை எழுதினேன். அதுதான் எனது முதல் கவிதை. அந்த வகையில், நான் கவிதை எழுதுவதற்கு விதையாக இருந்தவர் கலைஞர்தான்.

## நிர்வாகிகள் அறிவிப்பு

1983-ஆம் ஆண்டு, திருவாரூர் நகரக் கழகத் தேர்தலின்போது, கட்சி மூத்தவர்கள் தனித் தனி அணிகளாகத் திரண்டு நின்றனர். என் தந்தையார் ஆர்.ஏ.எஸ்.ராஜனும் ஒரு அணியில், பொறுப்புக்கு நின்றார். கோஷ்டி யுத்தம் தீவிரமானதை அறிந்த கலைஞர், 'என் ஊரிலேயே கட்சிக்குள் பிரச்சினையா?' என கடிந்துகொண்டதுடன், நிர்வாகிகளை நானே அறிவிக்கிறேன் என திருவாரூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளை அறிவித்தார். அவர் அறிவித்த பட்டியலிலும் இரண்டு அணியினரும் இடம்பிடித்திருந்தனர். நகரக் கழகப் பொருளாளராக டாக்டர் ஆர்.ஏ.எஸ்.ராஜன் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என, என் தந்தையார் பெயரை அறிவித்த, காந்தக் குரலை, என்னால் மறக்க முடியாது.

## கலைஞரின் வாழ்த்து!

1983-ஆம் ஆண்டு, 'கற்பனைச் சுவடுகள்' என்கிற என் முதல் கவிதை நூலை வெளியிட்டேன். அதற்கு, கலைஞரின் வாழ்த்து வாங்க, ஜூன் 2-ஆம் தேதி, சென்னைக்கு வந்தேன். மறுநாள் கலைஞரின் பிறந்தநாள் நிகழ்ச்சி என்பதால், ஒருநாள் விட்டு, கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்றேன். 'பிறந்த நாளில் மாலைகளை வாங்கி வாங்கி, தலைவரின் தோள்பட்டைகள் வீங்கி, வலி ஏற்பட்டுவிட்டது. அதனால் இப்போதைக்கு தலைவர் வாழ்த்துத் தரமாட்டார்' என்றார் அண்ணன் சண்முகநாதன். பிடிவாதமாய் நின்று, கலைஞர் மாடிப்படி இறங்கி வந்ததும், என் கவிதைப் புத்தகத்தை அளித்து வந்தேன். மூன்றாம் நாள் போனபோது, டைப் செய்யப்பட்ட கலைஞரின் வாழ்த்தையும் என் புத்தகப் படியையும் சண்முகநாதன் கொடுத்தார்.

'புதிய தலைமுறையின் எழுச்சிமிக்க இளைஞர்களில் ஒருவராகக் கவிஞர் ஆரூர் தமிழ்நாடன்' என அவரது வாழ்த்து வரிகளை, வருடிப் பார்த்து வருடிப் பார்த்து புல்லரித்து நின்றேன். எனக்கு அப்போது உலகையே வெற்றி பெற்றதுபோல ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது.

எனது கவிதைகளை கலைஞரின் இரண்டாவது சகோதரி சண்முகசுந்தரத்தம்மாள் மிகவும் ரசிப்பார். அவர் அரசியல் ஆர்வம் கொண்டவர் மட்டுமல்ல; கவிதைகளின் மகா ரசிகை. முரசொலியில் அவ்வப்போது வரும் என் கவிதைகளைப் படித்துவிட்டு, என்னைப் பார்க்கும் போதெல்லாம் ஞாபகமாய் 'உனது உயரத்தை ஒப்பிட்டா, இமயம் கூட உன் இடுப்பளவே இருக்குன்னு தலைவரைப் பத்தி எழுதியிருந்தியே, அது நல்லா இருந்துச்சு' என வரிகளை சுட்டிக்காட்டிப் பாராட்டுவார். எங்கள் அப்பா, உள்ளூர் கட்சிப் பிரச்சினையில் கட்சி மாறியபோது, என்னிடம் 'அப்பாவுக்கு ஏன் இப்படி புத்திபோச்சு. நீங்கள்லாம் சொல்லக்கூடாதா?' என உரிமையாய்க் கேட்டிருக்கிறார்.

## துண்டுச் சீட்டுக்கும் கவனம்

1990-ஆம் ஆண்டு, சுரதாவின் 'உலகத் தமிழ்க்கவிஞர் பேரவை' மாநாடு தர்மபுரியில் நடைபெற்றது. முதல்வரான கலைஞர், எங்களுக்கெல்லாம் கவிமாமணி விருது கொடுக்கிறார். மாநாட்டிற்குப் போனபோது பலத்த பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டிருக்க, காவலர்கள் எங்களை உள்ளே அனுமதிக்க மறுத்தனர். அப்போது ஒரு துண்டுச் சீட்டில், 'தலைவா, விருதுபெறவேண்டிய நாங்கள் வெளியே நிற்கிறோம் 'என எழுதி, ஒரு காவலர் மூலம், மேடையில் இருந்த கலைஞரிடம் அனுப்பினேன். அடுத்த நிமிடம் அரக்கப் பரக்க ஓடிவந்த அதிகாரிகள், பவ்வியமாக எங்களை உள்ளே அழைத்துச்சென்று அமரவைத்தனர். இப்படித் துண்டுச் சீட்டிற்கும் அருள்பாலித்தவர் கலைஞர்.

> அவரின் கையெழுத்தோடு 'இனிய உதயத்தில்' வெளியிட்டிருந்தோம். அதையும் பார்த்ததாகப் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

## கலைஞரிடம் விண்ணப்பம்

1995 ஆம் ஆண்டில், நான் சென்னைக்கு வாய்ப்புகள் தேடி வந்து, ஒரு கட்டத்தில் தாக்குப்பிடிக்க முடியாமல் ஊருக்குச் செல்லலாம் என முடிவு செய்தபோது, அண்ணன் சின்னகுத்தூசி அவர்கள்தான் 'அவசரப்படாதீங்க. நாளைக்குக் காலைல முரசொலிக்கு வாங்க. கலைஞரைப் பார்த்து சன்.டி.வி.க்கு விண்ணப்பம் கொடுக்கலாம்' என்றார். அதேபோல, அடுத்த நாள் கோடம்பாக்கம் முரசொலி அலுவலகம் சென்றபோது கலைஞரின் அறைக்கு அழைத்துச் சென்றார் சின்னகுத்தூசி. 'சாதிக்கப் போறேன்னு இங்க வந்தார். இப்ப ஊருக்கே போறேன்'னு ஓடப்பார்த்தார். அதான் உங்கக்கிட்ட அழைச்சிக்கிட்டு வந்தேன், சன்.டி.வி.யில் இவருக்கு வாய்ப்பு கிடைச்சா பரவால்ல' என்றார் சின்னகுத்தூசி. எனது விண்ணப்பத்தை வாங்கிப் பார்த்த கலைஞர், 'புகழ் (கலாநிதி மாறன்) ஃபாரின் போயிருக்கார். வரட்டும்' என்றபடி, அந்த விண்ணப்பத்தின் மேலே இடதுபக்கம் 'மு.க' என கையெழுத்துப் போட்டார்.

அப்போதுதான், சின்னகுத்தூசி அவர்கள் 'கொஞ்ச நாளைக்கு, நக்கீரனுக்குப் போங்களேன்' என்றபடி, நக்கீரனில் ஐக்கியப்படுத்தினார். அதன் பின்னர், சன் டி.வி.யில் இருந்து அழைப்பு வந்தது. கலைஞர் மூலம் ஏற்படுத்தப்பட்ட அந்த வாய்ப்பை என்னால் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை.

## சங்கீதமான சந்திப்புகள்!

நக்கீரனில் இருந்து வெளியாகும் 'இனிய உதயம்' இலக்கிய இதழின் பொறுப்பாசிரியராய் ஆனபிறகு, நேர்காணலுக்காக, கவிக்கோ அப்துல்ரகுமானுடன் இருமுறை கோபாலபுரம் சென்றேன். மாடியில் தனது அறையில் கம்பீரமாக அமர்ந்திருந்தார். அந்தச் சந்திப்புகளின்போது இலக்கியம், திருவாரூர் நினைவுகள் என நிறைய பகிர்ந்து கொண்டார். 'கருணை எம்.ஜமாலின் மகன் கூட சமீபத்தில் இறந்து விட்டார்' என எங்களுக்குத் தெரியாத திருவாரூர் தகவலையும் பகிர்ந்துகொண்டார்.


அவரது தந்தையார் முத்துவேலர், தனக்குப் பார்வை மங்கிவிட்டதால், திருவாரூர் கமலாம்பிகா வங்கியில், தன் பெயரில் இருந்த பங்குகளை தன் மகனான கலைஞர் பெயருக்கு மாற்றவேண்டும் என அந்த வங்கிக்கு எழுதிக் கொடுத்த கடிதத்தைத் தேடிப்பிடித்து, அவரின் கையெழுத்தோடு 'இனிய உதயத்தில்' வெளியிட்டிருந்தோம். அதையும் பார்த்ததாகப் பெருமிதத்துடன் தெரிவித்தார். அந்தச் சந்திப்பு அற்புத அனுபவமாக இருந்தது.

கலைஞர் தொடர்பான நினைவுகள், அனுபவங்கள் என என் நெஞ்சு நிறைய இன்னும் பல புதையல் உண்டு. பல்வேறு பரிமாணங்களோடு திகழ்ந்த பிரமிக்கவைக்கும் பிரபஞ்சம் கலைஞர். அவர் காலத்தில் வாழக்கிடைத்த வாய்ப்பை வணங்குகிறேன்.

**தொகுப்பு : நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## திராவிட எழுத்துகள் பரவட்டும்!




பேரறிஞர் அண்ணா எழுதிய அறுபதுக்கும் மேற்பட்ட நாடகங்களில் 'நீதி தேவன் மயக்கம்' குறிப்பிடத்தக்கது. தி.மு.கழகம் தொடங்கப்படுவதற்கு முன்பே, தந்தை பெரியாரின் தலைமையில், அண்ணா செயல்பட்ட காலத்தில் எழுதப்பட்ட நாடகம்.

இராமாயணத்தை உயர்த்திப் பிடித்து, அன்றைக்குத் தமிழறிஞர்கள் பலர் பிரச்சாரம் செய்த நிலையில், அதை எதிர்கொள்வதற்காக அண்ணா இந்த நாடகத்தை எழுதினார். கடவுளும், மதமும் வெறும் கட்டுக்கதையே என்பதை, அந்தப் புராணக் கதையிலிருந்தே நிறுவி இருப்பார். பகுத்தறிவாளர்கள் என்பவர்கள் புராணங்களைப் படிக்காததால் உருவானவர்கள் அல்ல, அவற்றையெல்லாம் படித்துப் புரிந்துகொண்டதால் உருவானவர்கள் என்பதை அண்ணாவின் 'நீதி தேவன் மயக்கம்' நாடகம் தமிழ்நாட்டுக்கே அறிவித்தது.

இந்த நாடகம், இன்று தமிழ்நாட்டை விட, பிற மொழி பேசும் மாநிலங்களுக்கே கொண்டு செல்லப்பட வேண்டும். நவீன சிந்தனையைத் தூண்டும் முக்கியமான இந்த நாடகத்தினை 'திராவிடியன் ஸ்டாக் (DRAVIDIAN STOCK) பதிப்பகம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, நூலாகக் கொண்டு வந்துள்ளது. காலத்தின் தேவையறிந்த முயற்சி, தெற்கின் திராவிடச் சிந்தனைகள் எங்கும் பரவ வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### தொண்டனுக்குக் கிடைத்த அளவில்லா மகிழ்ச்சி!



காரை. புரட்சி மணி

2001-ஆம் ஆண்டு இனமானப் பேராசிரியர் அவர்கள், திருவாரூர் கீழவீதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வருகை தந்தார். அந்த மேடையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றி நான் எழுதிய 'சொலிக்கும் சொத்து' என்ற ஒரு சிறிய கவிதை நூலைப் பேராசிரியர் அவர்கள் வெளியிட, நாகை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஏ.கே.எஸ்.விஜயன் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். அருகில், அப்போது திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அ.அசோகன் இருந்தார். அடிமட்ட கழகத் தொண்டனுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு என்று இன்றும் நினைத்துப் பெருமைப்படுகிறேன். என் இல்லத்திற்கு வருபவர்கள் சுவரில் மாட்டி வைக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்தைப் பார்த்து, என்னிடம் விவரம் கேட்டுப் பாராட்டிவிட்டுச் செல்லும் போது நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

**- காரை.புரட்சி மணி, குடவாசல், திருவாரூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### போராட்டத்துக்குப் பின் கொள்முதல்!

2002-ஆம் ஆண்டு, அ.தி.மு.க. அரசின் தவறான முடிவுகளால் நெசவாளர்கள் நலிவடைந்த நிலையில், கலைஞர் கஞ்சித் தொட்டி திறக்கும் போராட்டத்தை அறிவித்து, திருவள்ளூர் மாவட்டம், அம்மையார்குப்பம் பகுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவரது போராட்டத்துக்குப் பின்னர், அப்பகுதியில் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகள், அவசர அவசரமாக கொள்முதல் செய்யப்பட்டன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

635

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131